I Additional District Court, Thoothukudi.

O.S.No. 127/2021 நாள் : 12.09.2025

வா.சா.2– திரு. முத்துபாண்டியன்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–

இரண்டாவதாக பணம் கொடுத்ததாக சொல்லும்போது வா.சா.1 கண்ணன்தான் என்னை அழைத்துச் சென்றார். நானும், வா.சா.1 ம், சங்கரநாராயணன் ஆகியோர் சென்றோம். அப்போது காலை 11 மணியிருக்கும். நான் காலை 8 மணியளவில் மணியாச்சியில் இருக்கும்போது வா.சா.1 என்னை கைபேசி மூலமாக அழைத்தார். சங்கரநாராயணன் என்பவரை நான்தான் அழைத்தேன். சங்கரநாராயணனுக்கு சுப்பலாபுரம் அருகில் உள்ள கரிசல்பட்டி சொந்தஊர். நான் அழைத்ததால் அவர் மணியாச்சி புறவழி சாலைக்கு வந்தார். நாங்கள் இருவரும் இரு சக்கரவாகனத்தில் வந்தோம். வா.சா.1 ம் இருசக்கர வாகனத்தில் வந்தார். பணம் கொடுத்ததாக சொல்லும்போது பிரதிவாதி, சின்ன சுப்பையா, குருவம்மாள், நான் ஆகியோர் இருந்தோம். வா.சா.1 இருசக்கர வானத்தில் பெட்டியில் பணம் வைத்திருந்தார். பெண்கள் ஓட்டும் இருசக்கர வாகனம் போல அந்த வாகனம் இருந்தது. பணத்தை நான் எண்ணிப் பார்த்தேன். வா.சா.1, சங்கரநாராயணன், சின்ன சுப்பையா, குருவம்மாள் ஆகியோர் பணத்தை எண்ணிப் பார்த்தோம். பொதுவாக பெரிய தொகைகளை காசோலை மூலமாகத்தான் கொடுப்பார்கள் என்றால் அங்கு ரொக்கமாகத்தான் கொடுத்தார்கள். மேற்படி பணம் வங்கியிலிருந்து எடுக்கப்பட்டதா அல்லது கடனாக வாங்கப்பட்டதா என்றால் எனக்குத் தெரியாது. பணம் கொடுத்ததற்கு ஆதாரம் உள்ளதா என்றால் ஒப்பந்தத்தில் எழுதி வாங்கியிருக்கிறோம். ஒப்பந்தத்தில் பின்புறமாக எழுதப்பட்டுள்ளது. சின்ன சுப்பையா என்பவர் எழுதினார். அந்த

தேதி 08.08.2020 கிழமை சரியாக தெரியவில்லை. சின்ன சுப்பையா பத்திர எழுத்தர் அல்ல. அவர் ஆசிரியர். பத்திரத்தில் முதலில் பிரதிவாதியும், அடுத்து நானும், அடுத்து சின்ன சுப்பையாவும், குருவம்மாளின் கணவரும் கையொப்பமிட்டோம். நான் சொல்வதுபோல் 08.08.2020 அன்று பிரதிவாதிக்கு ரூபாய் ஒரு கோடி கொடுத்ததாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. பத்திரத்தில் மேற்படி சின்ன சுப்பையா எழுதிய மேற்குறிப்பில் அடித்தல், திருத்தல் எதுவும் இல்லை. பொதுவாக பத்திரம் எழுதினால் அதில் சிறிய திருத்தம் இருந்தாலும் இருதரப்பினரும் கையொப்பமிட வேண்டுமென்றால் சரிதான். வா.சா.ஆ1ல் கால அவகாசம் ஒன்றரை மாதம் அல்லது இரண்டு மாதம் எழுதினார்கள். கால அவகாசம் என்பது குறிப்பிட்ட காலத்திற்குள் கிரையம் முடிக்க வேண்டுமென்று முக்கியமாக எழுதப்படுவது என்றால் சரிதான். மேற்படி ஒன்றரை மாதம், இரண்டு மாதத்திற்குள் கிரையம் முடிக்கவில்லை. அவர்களுக்குள் என்ன பிரச்சனை என்று தெரியாது. பாக்கித் தொகையை வா.சா.1 வைத்திருந்தாரா என்று எனக்குத் தெரியாது. அதற்கு பிறகு வா.சா.ஆ1 சம்பந்தமாக வா.சா1 அல்லது இதர தரப்பினர் யாரும் என்னிடம் பேசவில்லை. தரப்பினர்கள் காவல்நிலையம் சென்றார்களா என்றால் எனக்குத் தெரியாது. கிரையத்திற்காக நான் தரகு வாங்கினேனா என்றால் இல்லை. பொதுவாக முன்பணம் கொடுத்தவுடனே தரகு பெற்றுக் கொள்வோம் என்றால் சரிதான். நான் வாங்கவில்லை. ஒப்பந்தம் எழுதும்போது வாதிகள் வரவில்லை. பணம் கொடுத்த நபராக வா.சா.1 கையொப்பமிட்டார். வாதிகள் கையொப்பமிட்டார்களா என்று எனக்குத் தெரியாது. வா.சா.ஆ1 மற்றும் அதில் உள்ள மேற்குறிப்பை வாதிகளும், வா.சா.1ம், நானும், சின்ன சுப்பையா, சங்கர நாராயணன் மற்றும் குருவம்மாள் ஆகியோரும் சேர்ந்து உற்பத்தி செய்துகொண்டோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தை

கிரையம் செய்வதாக  பிரதிவாதி பேசவில்லை என்றும், கிரையம் செய்யும் எண்ணமும் பிரதிவாதிக்கு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதி வீட்டில் வைத்து கிரையம் பேசப்பட்டதாக சொல்லப்படும் சம்பவமே நடக்கவில்லை என்றால் சரியல்ல. 05.03.2020 அன்று வா.சா.ஆ1 எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் முன்பணமும் கொடுக்கப்படவும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ1–ஐ மோசடியாக நாங்கள் அனைவரும் சேர்ந்து ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல. வாதிக்காக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.09.12 17:45:33 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.

I Additional District Court, Thoothukudi.

**O.S.No. 127/2021 நாள் : 12.09.2025**

**வா.சா.3– திரு. சங்கரநாராயணன்.**

குறுக்கு விசாரணை

வா.சா.1–ஐ சுமார் 5, 6 ஆண்டுகளாக எனக்கு பழக்கம். தாவா சொத்தை வாங்கிக் கொடுத்ததிலிருந்து எனக்கு பழக்கம். அதற்கு முன்பாக வா.சா.1–ஐ எனக்குத் தெரியாது. வா.சா.2–க்கு வா.சா.1 சுமார் 15 ஆண்டுகளாக பழக்கம். வா.சா.2 க்கு வா.சா.1 எப்படி பழக்கம் என்று எனக்குத் தெரியாது. வா.சா.1 பல தொழில் செய்வதாக கேள்விப்பட்டுள்ளேன். என்ன என்ன தொழில் செய்கிறார் என்று எனக்குத் தெரியாது. வா.சா.ஆ 1 எழுதும்போதே பல தொழில்கள் செய்வது எனக்குத் தெரியும். வா.சா.1 நல்ல வசதியானவர் என்று கேள்விப்பட்டுள்ளேன். தாவா சொத்தை கிரையம் பேசும்போது பார்த்துள்ளேன். அதை பிரதிவாதிதான் காட்டினார். அப்போது நானும், வா.சா2 ம் இருந்தோம். 2020 ம் ஆண்டு மார்ச் 1 ம் தேதி அல்லது 2 ம் தேதி பார்த்தேன். நான் விவசாயமும், ரியல் எஸ்டேட் தொழிலும் செய்து வருகிறேன். நான் சுமார் 30 பேருக்கு நிலம் வாங்கிக் கொடுத்துள்ளேன். என் சொந்த ஊர் சாத்துார் வட்டம் கரிசல்பட்டி கிராமம். நான் கரிசல்பட்டி கிராமத்தில்தான் குடியிருக்கிறேன். தாவா சொத்து நாலாட்டின்புதுாரில் உள்ளது. தாவா சொத்து திருநெல்வேலி சாலைக்கு வடபுறமாக உள்ளது. தாவா சொத்தின் விஸ்தீரணம் 3 ஏக்கர் என்று பிரதிவாதி சொல்லித் தெரியும். தாவா சொத்தை நானோ, வா.சா1 னோ அளந்து பார்க்கவில்லை. தாவா சொத்து குறித்த வருவாய்த்துறை ஆவணங்களையோ, வில்லங்கச் சான்றிதழ்களையோ நான் பார்த்ததில்லை. பொதுவாக சொத்தை வாங்கி, விற்கும்போது முதலில் எடுத்துப் பார்க்கும் ஆவணம் வில்லங்கச் சான்றிதழ்

என்றால் சரிதான். 03.03.2020 அன்று கிரையம் பேசும்போது அசல் மூல பத்திரத்தை பார்த்தேன். சொத்து பிரதிவாதிக்கு மேற்படி பத்திரப்படி எப்படி பாத்தியம் என்றால் அவரது தாயார் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் படி பாத்தியம். 05.03.2020 அன்று ரூபாய் 50,00,001/- பிரதிவாதியிடம் கொடுக்கும்போது பிரதிவாதி அசல் பத்திரத்தை கொடுத்தார். வா.சா2 தான் மேற்படி தேதியில் காலை 7 மணியளவில் அழைத்தார். காலை 7 முதல் 8 மணிக்குள் பிரதிவாதி வீட்டிற்கு சென்றோம். அங்கு பிரதிவாதியும், அவரது மகன் மனோ, ராமமூர்த்தியின் மனைவி குருவம்மாள், வாத்தியார் சின்ன சுப்பையா, நான், வா.சா.2, வா.சா.1, வா.சா1 ன் மகன் ஆகியோர் இருந்தோம். வா.சா.1 தான் பத்திரத்தை தட்டச்சு செய்து கொண்டுவந்தார். அதை நான் படித்துப் பார்க்கவில்லை. பத்திரம் எங்கு தட்டச்சு செய்யப்பட்டது என்று எனக்குத் தெரியாது. பத்திரத்தை தட்டச்சு செய்து பிரதிவாதி வீட்டில் கொண்டு வந்து கொடுக்கும்போது பணம் கொடுக்கப்பட்டது. பணம் ரொக்கமாகத்தான் கொடுக்கப்பட்டது. பணம் வா.சா1 க்கு எப்படி வந்தது என்று எனக்குத் தெரியாது. கோவில்பட்டியில் உள்ள ஜோதி டீக்கடைக்கு நாங்கள் வழக்கம்போல சென்றோம். நானும், வா.சா.2 ம் சென்றோம். நாங்கள் தொழில் சம்பந்தமாக பேசிக் கொண்டிருக்குபோது குருவம்மாள் மற்றும் சின்ன சுப்பையா அதை கேட்டு வந்தார்கள். அவர்களும் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறார்கள். அவர்கள் இருவரையும் அதற்கு முன்பு பார்த்ததில்லை. குருவம்மாள் மற்றும் சின்ன சுப்பையாவை எங்களுக்கு அன்றுதான் பழக்கம். நானும், வா.சா2 ம் டீ குடித்துக் கொண்டிருந்ததாகவும், சின்ன சுப்பையாவும், குருவம்மாளும் அங்கு வந்ததாகவும் பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. குருவம்மாள் மற்றும் சின்ன சுப்பையாவிடம் நான் பேசவில்லை. வா.சா.2 ம் அந்த இடத்தில் வைத்து பேசவில்லை. மேற்படி விபரத்தை வா.சா1 னிடம் நானும், வா.சா.2 ம்

சொன்னோம். வா.சா1 வீட்டிற்கு சென்று சொன்னோம். 01.03.2020 அன்று சொன்னோம். வா.சா1ன் வீடு வீரவாஞ்சி நகரில் உள்ளது. பிறகு நாங்கள் குருவம்மாளுக்கு தகவல் சொன்னோம். அவர் வா.சா.1-ஐ அழைத்து வரச் சொன்னார். நானும், வா.சா1 மற்றும் 2ம் வா.சா.1ன் மகன், குருவம்மாள் ஆகியோர் வந்தார்கள். காலையில் பிரதிவாதி வீட்டிற்கு சென்றோம். அப்போது எவ்வளவு மணி நேரம் இருக்கும் என்று எனக்குத் தெரியாது. மொத்தம் 3 ஏக்கருக்கு கிரையம் பேசினோம். ஏக்கருக்கு ரூபாய் ஒரு கோடியே பதினேழு லட்சம் பேசினோம். சொத்தின் வழிகாட்டின் மதிப்பை நான் பார்க்கவில்லை. சொத்தை வாங்குபவர்தான் பார்க்க வேண்டும். வா.சா.1 வழிகாட்டு மதிப்பை பார்த்தாரா என்று எனக்குத் தெரியாது. சின்ன சுப்பையா ஆசிரியர் வேலை செய்தார் என்று கேள்விப்பட்டேன். சூளைக்கரையில் வேலை செய்ததாக சொன்னார். குருவம்மாள்தான் எங்களுக்கு கைபேசி மூலம் வா.சா1-ஐ அழைத்து வரும்படி சொன்னார். குருவம்மாளும், சின்ன சுப்பையாவும் சொத்து சம்பந்தமாக பேச பிரதிவாதி வீட்டிற்கு வரச் சொன்னதாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. 03.03.2020 அன்று பிரதிவாதி வீட்டில் சொத்து சம்பந்தமாக பேசியதாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஏக்கருக்கு ரூபாய் ஒரு கோடியே பதினேழு லட்சம் பேசியதாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. 05.03.2020 அன்று நானும், வா.சா. 1 மற்றும் 2ம் பிரதிவாதி வீட்டிற்கு சென்றதாகவும் பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த தேதியில் பிரதிவாதிக்கு ரூபாய் 50,00,001/- முன்பணமாக கொடுத்ததாகவும், அப்போது பிரதிவாதியின் மகன் மனோ ராகேஷ் இருந்ததாகவும் பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த தேதியில் வா.சா.ஆ1ல் பிரதிவாதி கையொப்பமிட்டு கொடுத்ததாகவும் பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. சொத்து சம்பந்தமாக வில்லங்கச் சான்றிதழ்

பார்க்கவில்லை. 07.08.2020 அன்று சொத்து குறித்து நாங்கள் யாரும் பேசவில்லை. சொத்து சம்பந்தமாக அடமானம் இருப்பதாக வா.சா.1 எங்களை அழைத்ததால் 08.08.2020 அன்று நானும், வா.சா.1 மற்றும் 2, வா.சா.1 ன் மகன் ஆகியோர் போனோம். நாங்கள் போகும்போது காலை சுமார் 11 மணியிருக்கும். அங்கு குருவம்மாளின் கணவர் ராமமூர்த்தி, பிரதிவாதி, பிரதிவாதியின் மகன் ஆகியோர் இருந்தார்கள். குருவம்மாள் அங்கில்லை. ராமமூர்த்தி என்ன வேலை செய்கிறார் என்று தெரியாது. வா.சா.1 ம் அவரது மகனும் பிரதிவாதியிடம் பணத்தை கொடுத்தார்கள். வாதியின் மகன் அப்போது இருந்ததாகவும், பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டதாகவும், நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. சொத்து குறித்த அடமான பத்திரத்தை 08.08.2020 அன்று நானோ, வா.சா.1, 2 டோ பார்க்கவில்லை. தாவா சொத்து குறித்து வில்லங்கமும் இல்லை என்றும், வில்லங்கத்தை தீர்ப்பதற்காக பிரதிவாதி ரூபாய் ஒரு கோடி கேட்டதாக பொய்சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. சொத்து சம்பந்தமாக எவ்வளவு தொகைக்கு அடமானம் இருந்தது என்று நான் பார்க்கவில்லை. அடமானம் இருந்ததா இல்லையா என்று எனக்குத் தெரியாது. வா.சா.ஆ 1 ல் பின்பக்கத்தில் சின்ன சுப்பையா மேற்குறிப்பு எழுதியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நானும், வா.சா.2 ம், சின்ன சுப்பையா, குருவம்மாள் ஆகியோர் வா.சா.1 க்கு வேண்டிய நபர்கள் என்றும், அதனால் வா.சா.ஆ 1–ஐ நாங்கள் மோசடியாக ஏற்படுத்தியுள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு எந்த தொகையும் கொடுக்காமல் முன்பணம் கொடுத்தது போல வா.சா.ஆ 1 ஐ உற்பத்தி செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1 க்காக பிரதிபலன் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றும், மோசடியாக எங்களால் உருவாக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.1 க்காக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா

சொத்து கிரையம் சம்பந்தமாக நான் வேறு யாரிடமும் பேசவில்லை. நான் பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.09.12 17:45:45 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.